# ஒரு மதம் அல்லது நம்பிக்கையை பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்.

இந்தப பிரபஞ்சம் மிகப் பெரியது. பல்வேறு வகையான உயிரினங்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அனைத்து சிறு உயிரினங்களுடனும் நாம் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவற்றுள், நம் மனிதப் பிறப்பே மிகவும் மகத்தானது என்றும், அனைத்தும் அறிந்தவர்கள் என்றும், அனைத்துக்கும் மேலானதொரு சக்தியைக் கொண்டவர்கள் என்றும் நாம் அனைவருமே இன்று வரை நம்பிக் கொண்டிருக்கின்றோம். நம் நம்பிக்கை உண்மையானதொன்றாகக்கூட இருக்கலாம்ஞ அது அவ்வாறு இருக்கையில் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களையும் விட மனிதனே ஒருபடி மேலாக சென்று சுயநலம் எனும் ஒரு வார்த்தைக்குள் தன்னைத்தானே புதைத்துக்கொண்டு அக்குளிக்குள் இருந்து எழுந்துவர சில நேரம் மறுக்கிறான்.மனிதனின் எண்ணத்திற்குள் கலந்திருக்கும் குரோதம், வன்மம், வெறுப்பு, பொறாமை போன்ற அனைத்து தீய குணங்களுக்கும் மன்னனாக இந்த சுயநலம் எனும் ஒற்றை வார்த்தையே சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டு இருக்கிறது. இந்த ஒற்றை வார்த்தையை நம் எண்ணத்தில் இருந்து விலக்கி விட்டால் மனிதன் கடவுளை ஒற்ற ஒரு தூய பிறப்பாக மாறி இந்த உலகத்தை புத்துணர்வுடன் புதுப்பிக்க வழிவகுப்பான்.

நம் உலகம் பரந்து விரிந்தது. தினமும் கதிரவன் எழுந்தவுடன் நாமும் நமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றிக்கொள்ள அவனுடன் சேர்ந்தே எழுந்து பணி புரிகிறோம். தினமும் நாம் ஒரு நாளில் பல்வேறுபட்ட மனிதர்களையும் அவர்களது எண்ணங்களுடனுமே உறவாடுவோம். மனிதனுக்கு மனிதன் உடலாலும் உள்ளத்தாலும் தனது எண்ணத்தாலும் வேறுபட்டவனாகவே திகழ்கிறான். நாம் தினமும் அலவளாளும் மனிதர்கள் தனக்கெனவே ஒரு தனித்துவமான வாழ்க்கை பயணத்தையும் ஒரு வேறுபட்ட இலக்குகளையும் கொண்டு சதா தினமும் நம்முடன் சேர்ந்தே பயணிக்கிறான். நாம் ஒரு போதும் நம் எண்ணத்துக்கு இன்னொருவரை உடன்பட நிர்பந்திக்க முடியாது, காரணம் இப்பூமியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தனக்கென ஓர் சுய அடையாளமும் , தனித்துவமான ஒரு வாழ்க்கைப் பாதையும் இருக்கின்றது. எனவே அவரவர் எண்ணங்களுக்கு மனிதராகிய நாம் ஒவ்வொருவரும் மதிப்பளிப்பது இன்றியமையாத ஒரு கடமையாக இருக்கின்றது.

இந்த உலகமானது பல்வேறுபட்ட உயிரினங்கள் ஒன்று சேர்ந்து வாழ கடவுளால் நமக்கு உருவாக்கித் தரப்பட்ட ஒரு சொத்தாகும். அந்த வகையில் இவ்வுலகில் வாழும் அனைவரும் பல்வேறுபட்ட இன மத சமயங்களினால் ஒருவருக்கொருவர் வேறுபட்டு காணப்படுகிறோம். ஆனால் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்து வாழ பழகி வருகிறோம் இது வரவேற்கத்தக்கதாய் இருப்பினும், இன்றுவரை உள்ளளவில் சிலர் இதனை ஏற்க மறுத்து மனதுக்குள் வஞ்சத்தை விதைத்து துவேசத்தை வெளிக்காட்டி நிஜத்தில் மனிதராக அன்றி மிருகமாக வாழ்கின்றோம்.

பல்வேறுபட்ட மதங்களை சார்ந்த இருந்தாலும் ஒரு புள்ளியில் நாம் அனைவரும் ஒன்றிணைவோம் என்ற ஒரு நம்பிக்கையை தற்காலத்தில் நம் வாழ்க்கைக்குள் ஒரு வேண்டா விருந்தாளியாக வந்த இந்த கொரோனா நமக்கு ஞாபகப்படுத்தி விட்டது. என்னதான் வஞ்சம் குரோதங்களை மனதுக்குள் வைத்து வாழும் இருந்தாலும்கூட மனிதத்திற்கு ஒரு பிரச்சினை என வரும்போது மனிதராகிய நாம் அனைவரும் ஒத்து ஒருவராக செயல்படுகிறோம்.இது பிரிவினையிலும் ஒரு ஒற்றுமையை நமக்கு காண்பிக்கின்றது.

நம் மதங்கள் நம்மை ஒரு முழு மனிதனாக்குகிறது. நாம் எந்த மதத்தினை சேர்ந்து இருந்தாலும் கூட அம் மதமானது நம்மை ஒரு நேர் வழியில் இட்டுச் செல்ல ஒரு பாதையில் நமக்கு வழி வகுத்துத் தருகிறது. ஒவ்வொருவரின் மத நம்பிக்கையும் வேறுபட்டதாகவே அமையும். ஆனால் நாம் இன்னொருவரின் மத நம்பிக்கை அனுஂடானங்களுக்கு நாம் மரியாதை தர வேண்டியது நமது தலையாய கடமையாகும்.மனிதன் முதலில் தோன்றினானா? அல்லது மதம் முதலில் தோன்றியதா? எனும் ஒரு

கேள்விக்கு விடையளிப்பதற்கு நாம் ஒருநிமிடம் நிறுத்தி யோசிக்கிறோம். காரணம், இந்த கேள்விக்கு பதில் அறிவது நம் மதஉணர்வுகளை ஒரு நிமிடம் அசைத்து விடுகிறது. எது முதலில் தோன்றி இருந்தாலும்கூட இம் மதங்கள் அனைத்தும் மனிதனை ஒரு சிறந்த பாதையை கண்டெடுத்து அதன் வழியே அவனை இட்டுச் செல்லவே தவிர, மதமெனும் பெயரை வைத்து மனிதத்தை கொல்வதற்கல்ல. இதை நாம் புரிந்து சகல மதத்திற்கும் உரிய மரியாதையை வழங்கி வாழ வேண்டும்.

மனிதனாகப்பட்டவன் தனது சொந்த அனுபவங்களின் மூலமே தன்னை வளர்த்துக் கொள்கிறான். அந்தவகையில் பார்க்கும்போது அவன் தவறு செய்வதென்பது இன்றியமையாத ஒரு செயலாக இருக்கின்றது. தவறு என்பது சிறியது! பெரியது! என பேதம் இல்லாதது. காரணம், நாம் சிறிய தவறு! என எண்ணி செய்யும் ஒரு காரியத்தினால் இன்னொருவரின் முழு வாழ்க்கையும் அழிந்து விடக் கூடிய ஒரு தன்மை இந்த தவறுக்கு இருக்கிறது. ஆனால் அனைத்து தவறுக்கும் மன்னிப்பு எனும் ஒரு தண்டனையும் இருக்கின்றது.சில நேரங்களில் இந்த தண்டனையானது தவறு இழைத்தவனுக்கு ஒரு மறுபிறவியாகவும் இருக்கும். ஆகையால் மன்னிப்பு வழங்குதல் என்பது ஒரு சிறந்த குணமாக இருப்பதோடு மன்னிப்பு பெற்றவனுக்கு இது ஒரு அர்த்தமுள்ள தண்டனையாகவும் இருக்கிறது.

ஒரு மனிதனுக்கு நிகழும் ஒரு துர் நிகழ்வானது அவனை மனதளவில் உடைத்து விடுகிறது. ஆனாலும் சில நேரங்களில் அந்த கசப்பிலிருந்து மீண்டு வந்து தன் இயல்பு வாழ்க்கைக்குள் நுழைந்து செல்வதும் ஒரு வீர சாகசமாகவே இருக்கிறது. அந்த வகையில் இந்த சகிப்புத்தன்மை ஆனது மனிதனின் வாழ்க்கையில் இன்றியமையாத மிக முக்கியமான ஒரு குணமாக இருக்கிறது.

நாம் என்னதான் ஒரு குழுவாக செயற்பட்டு நமது வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றினாலும் கூட நம் வாழ்க்கையை வாழ வேண்டியது நாமே. ஒவ்வொரு மனிதனுக்கும் தான் வாழும் வாழ்க்கையானது பிறரிடமிருந்து வேறுபடுகிறது. அது அவன் கடந்து வந்த பாதையிலிருந்து அவன் பெறும் அனுபவங்களை வைத்து தீர்மானிக்கப்படுகிறது. வாழ்க்கை என்பது ஒரு தனி மனிதன் தனது சுய முடிவுகளை தானே எடுத்து அதன் வழியே ஒரு வெற்றிகரமானதொரு முடிவை அடைவதேயாகும். சில சமயங்களில் சிலருக்கு இது தோல்வியில் முடிந்தாலும் கூட அது அவனது வாழ்க்கையாகும், அது அவனது தனிமனித சுதந்திரமாகும். மனிதன் தன் வாழ்க்கையை வாழ அவன் அவனது வாழ்க்கை மீதான முடிவுகளை தானே எடுக்க வழிவகுத்தல் மிக முக்கியமான ஒரு அங்கமாகும். அந்தவகையில் பார்த்தோமேயானால், தனிமனித சுதந்திரமே தான் வாழவேண்டும் என்ற ஒரு நம்பிக்கையை மனிதனுக்கு ஊட்டுகிறது. எனவே இந்த சுதந்திரத்தின் மீதான நம்பிக்கையே மனித வாழ்க்கையை தீர்மானிக்கின்றது.

இவ்வுலகில் வாழும் ஏனைய உயிரினங்களை விட மனிதனுக்கு ஓர் அறிவு அதிகமாக உள்ளதென விஞ்ஞானம் கூறுகிறது. அந்தவகையில் பார்க்கும்போது, மனிதன் பிற மனிதனின் உள்ளத்தின் ஏக்கங்களை அறிந்து செயல்படக்கூடிய ஒரு ஞானம் அவனுக்குள்ளே இருக்கிறது. எனவேதான் அவன் பிறருக்கு ஏற்படும் இன்னலையும் தன் இன்னலாக நினைத்து உதவி புரிய முற்படுகின்றான் இதனையே மனிதாபிமானம் என நாம் கூறுகிறோம். இவ்வாறான குணங்களாலேயே மனிதன் பிற ஜீவராசிகள் இருந்து வேறுபட்டு காணப்படுகிறான.

திணை விதைத்தவன் திணை அறுப்பான்ஞூ வினை விதைத்தவன் வினையை அன்றே அறுப்பான்ஞூ என்றாகிவிட்டது நமது இந்த தற்காலம். மனிதனாகப் பட்ட நாம் இயற்கைக்கு செய்த கொடுமையும் பிற உயிரினங்களுக்கு செய்த பாவங்களையுமே நம் மனித இனத்துக்கு மாத்திரம் இன்று வந்துள்ள இந்த பேரழிவு. தினமும் லட்சக்கணக்கான மனித இறப்புக்களை சந்தித்து நாட்களை கடந்து செல்கிறோம். நாம் வாழும் இந்த நொடி மாத்திரமே நிஜம் என்றும், எதிர்காலம் எனும் ஒரு சொல்லை நம் அகராதியிலிருந்து அழிக்க வந்த ஒரு உயிர்கொல்லி கொரோனாவுடன் சதா வாழ்ந்து பழகிக் கொள்ள நேரிடுகிறது. ஒருவகையில் யோசித்துப் பார்த்தோமேயானால் நாம் இயற்கைக்கு நம் மனித இனத்தால் ஏற்படுத்தப்பட்ட அழிவை இயற்கை நமக்கு திருப்பி கொடுக்கிறது என கூட எண்ணத்தோன்றுகின்றது. மனிதனாகப்பட்டவன்

மனித குணங்களை மறந்து மிருக குணங்களில் வாழ்வதினாலேயே இந்த வன்கொடுமைகளையும் மனிதன் அனுபவிக்க நேரிடுகிறது. மிருகமாக இருப்பதை மறந்து மீண்டும் மனிதனாக மாறினால், இயற்கையுடனான ஒரு சமரசமான உலகில் மனிதன் மனித குணங்களுடன் மனிதனாக வாழ ஒரு வாய்ப்பு கிடைக்கும். இவ்வாய்ப்பானது மனித நற்குணங்களை மனிதன் மீட்டெடுத்தாலன்றி வேறு ஒன்றினாலும் நடவாது.